பசுமைக்கூடை வழங்கி முதல்வர் வாழ்த்து

▶ சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர் மற்றும் கூடுதல் தலைமை செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா - சுரேம் வர்மா தம்பதியின் மகள் ஷைலஜா - ஷகில் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் பெற்றோர்.

வெயில் தாக்கம் அதிகரிப்பு, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை எதிரொலி

கடற்கரை, பூங்காக்களை நோக்கி படையெடுத்த மக்கள் கூட்டம்

■ குடும்பத்துடன் இரவு வரை பொழுதை கழித்தனர்

■ தர்ப்பூசணி, கிர்ணிப்பழம், இளநீர் விற்பனை சூடுபிடித்தது

▶ சென்னை மெரினா கடற்கரையில் நேற்று திரண்ட கூட்டம்

சென்னை, மார்ச் 13: வெயில் தாக்கம் அதிகரிப்பு, ஞாயிற்றுக்கிழமை காரணமாக சென்னையில் நேற்று கடற்கரை, பூங்காக்களை நோக்கி மக்கள் படையெடுத்தனர். குடும்பத்துடன் இரவு வரை அவர்கள் பொழுதை கழித்தனர்.

சென்னையில், ஒரு வாரமாக நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதனால், பிற்பகல் வேளையில் சென்னையின் முக்கிய சாலைகளான அண்ணா சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை உள்ளிட்ட பல் வேறு சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்படுகிறது. வாகன போக்குவரத்தும் குறைந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் வேறு. வெயிலின் தாக்கம் காலை முதலே அதிகமாக தொடங்கியது. இதனால், மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கினர். மாலை நேரத்தில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தை கொண்டாடவும், இயற்கைகாற்றை அனுபவிப்பதற்காகவும் சென்னை மெரினா, பெசன்ட்நகர் கடற்கரை உள்ளிட்ட கடற்கரை பகுதியை நோக்கி மக்கள் படையெடுக்க தொடங்கினர். இதனால், மாலை 4 மணி முதல் கடற்கரை பகுதிகளில் மக்கள் கூட்டம் அதிகரிக்க தொடங்கியது. மாலை 6 மணிக்கு மேல் எங்கு பார்த்தாலும் மக்கள் தலைகளாக கடற்கரை பகுதிகள் காட்சியளித்தன. இதே போல பூங்காக்களிலும் மக்கள் படையெடுத்து இருந்த காட்சியை காண முடிந்தது. கடற்கரை, பூங்காக்களில் இரவு 8 மணி வரை குடும்பத்துடன் பொதுமக்கள் பொழுதை கழித்த காட்சியை காணமுடிந்தது. அங்கேயே, வீட்டில் இருந்து சமைத்து கொண்டுவரப்பட்ட உணவுகளை குடும்பத்துடன் உண்டு மகிழ்ந்தனர்.. பொழுதை கழித்து விட்டு இரவு 8 மணிக்கு பிறகு வீடுகளுக்கு புறப்பட்டனர்.

தர்ப்பூசணி, கிர்ணி பழம் விற்பனை மும்முரம்: வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் தர்ப்பூசணி, கிர்ணி பழம், வெள்ளரிக்காய், இளநீர் விற்பனையும் சூடுபிடிக்க தொடங்கியது. தர்ப்பூசணி ஒரு பீஸ் ₹10க்கு விற்பனை செய்யப்பட்டது. இளநீர் தரத்திற்கு ஏற்றார் போல் ₹30, ₹40 என்று விற்கப்பட்டது. வெள்ளரிக்காய் 3 துண்டு ₹10க்கும், மோர் ஒரு கிளாஸ் ₹10க்கும் விற்கப்பட்டது. இதே போல எலுமிச்சை சர்பத், கிர்ணிப்பழம், மாதுளம்பழம், ஆரஞ்ச் பழம் உள்ளிட்ட பழங்கள் ஜூஸ் விற்பனையும் அதிகரித்து காணப்பட்டது. அதே நேரத்தில் வெயிலுக்கு குளிர்ச்சியூட்டும் வகையில் சாலையின் ஓரத்தில் ஆங்காங்கே பழக்கடைகள் முளைத்துள்ளன. அந்த கடைகளில் மக்கள் பழங்களை தேர்வு செய்து வாங்கி சென்ற காட்சியை காண முடிந்தது.

போலி பட்டமளிப்பு விழா நடத்திய விவகாரம்

தனியார் அமைப்பின் வங்கி கணக்கு முடக்கம்

கோட்டூர்புரம் போலீசார் நடவடிக்கை

சென்னை, மார்ச் 13: நடிகர் வடிவேலுக்கு போலி டாக்டர் பட்டம் வழங்கிய தனியார் அமைப்பின் வங்கி கணக்கை முடக்கப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், 26ம் தேதி சர்வதேச ஊழல் எதிர்ப்பு மற்றும் மனித உரிமை ஆணையம் சார்பில் திரைப்பட நடிகர் வடிவேலு, இசையமைப்பாளர் தேவா, சின்னத்திரை நடிகர்கள் என 50 பேருக்கு அண்ணா பல்கலைக்கழகம் வழங்குவது போல், பல்கலைக்கழக முத்திரையுடன் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இந்த, டாக்டர் பட்டத்தை முன்னாள் நீதிபதி வள்ளிநாயகம் வழங்கினார். பின்னர் டாக்டர் பட்டம் போலியானது என தெரியவந்தது.

இது குறித்து அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் ரவிக்குமார், கடந்த 1ம் தேதி கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் படி, மோசடி உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் சர்வதேச ஊழல் எதிர்ப்பு மற்றும் மனித உரிமை ஆணையம் இயக்குநர் ஹரிஸ் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதில் ஹரிஷ் மற்றும் அவரது நண்பரை கைது செய்தனர்.

அதைதொடர்ந்து கோட்டூர்புரம் போலீசார் மோசடி தொடர்பாக விசாரணை நடத்திய போது, போலி டாக்டர் பட்டம் 4 பிரபலங்களுக்கு மட்டும் இலவசமாக வழங்கியதும், மீதமுள்ளவர்களுக்கு பணம் பெற்று கொண்டு போலி டாக்டர் பட்டம் வழங்கியது தெரியவந்தது. டாக்டர் பட்டம் வழங்க வசூலித்த பணத்தில் நிகழ்ச்சி ஏற்பாடுகள் செய்துள்ளனர். மீதமுள்ள பணத்தை ஹரிஷ் உள்ளிட்டோர் செலவு செய்து இருப்பது தெரியவந்தது.

அதைதொடர்ந்து கோட்டூர்புரம் போலீசார், இந்த மோசடி தொடர்பாக சர்வதேச ஊழல் எதிர்ப்பு மற்றும் மனித உரிமை ஆணையத்தின் வங்கி கணக்குகளை ஆய்வு செய்தனர். அப்போது, ஆடுதுறையில் உள்ள வங்கி ஒன்றில் இந்த தனியார் அமைப்பின் வங்கி கணக்கு இருந்தது தெரியவந்தது. அந்த வங்கி கணக்கில் தனியார் அமைப்பின் இயக்குநரான ஹரிஷ் பெயரில் 1.30 லட்சம் உள்ளது. அதைதொடர்ந்து போலீசார் அந்த வங்கி அதிகாரிகளுக்கு கடிதம் எழுதி தனியார் அமைப்பின் வங்கி கணக்கு மற்றும் பணத்தை முடக்கியுள்ளனர்.

Guidance TamilNadu

Request for Proposal-RFP

Name of Organisation : Tamil Nadu Industrial Guidance & Export Promotion Bureau ("Guidance")

Notice Description: The undersigned invite prospective bidders to respond to the RFP for "Selection of Global Management Consultant as Knowledge Partner for Global Investor Meet 2024".

Date of Issue of Request for Proposal (RFP) : 13.03.2023

Last Date for Submission of documents : 14.04.2023

Address to Submit Hardcopy of Proposals: Tamil Nadu Industrial Guidance and Export Promotion Bureau ("Guidance"), No.471, 11th Floor, Prestige Polygon Towers, Anna Salai, Rathna Nagar, Teynampet, Chennai, Tamil Nadu 600 035. Ph:044 2434 6725

To download a copy of the bid document, please visit:
www.tenders.tn.gov.in www.investingintamilnadu.com

Issuing Authority:
Managing Director & Chief Executive Officer (CEO), Guidance

DIPR/240/DISPLAY/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

THE REAL POWER IS BACK

BRING OUT YOUR BEST

BEWARE OF PIRATED PRODUCTS

Healthy Happy Family

Available@Online AEVAS DSTORE www.dstores.in

SCAN ME ! TO ORDER

MUSLI POWER X-TRA GMP CERTIFIED

Good Manufacturing Practice Certification GMP Quality

STOCKIST LIST
- Life Care Pharma Pvt Ltd (Chennai)
- Omkar Pharma Pvt Ltd (Chennai)
- Muthu Pharma Pvt Ltd (Chennai)
- Meenakshi Medical Distributor (Chennai)
- Shanthinath Agencies (Chennai)
- Viswanathan Ayush Agencies (Salem)
- Sri Ramana Medical Agencies Pvt Ltd (Salem)
- Mookambigai Agencies (Trichy)
- Shalimar Agencies (Erode)
- Sri Ramana Medical Agencies (Erode)
- Dhanlakshmi & Co (Madurai)
- Sai Agencies (Coimbatore)
- Sri Ramana Medical Agencies Pvt Ltd (Coimbatore)

TAMIL NADU 9025090109

TATA

டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட்

பதிவு முகவரி: 11வது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை 400013. கிளை முகவரி: டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024...

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட் (டிசிசர்ச்ஸ்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழேக் குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்" & "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 29–03–2023 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது, நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழேக் குறிப்பிடப்பட்டுள்ளன. அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுவதாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 29–03–2023 நாளில் பிற்பகல் 2 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டா. அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 28–03–2023 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்" ஆனதாகும்;

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீனம் வகை
5	10331043	திரு. M அருண்குமார். திருமதி கீதா மணி	₹20,98,958/– (ரூபாய் இருபது இலட்சத்து தொண்ணூற்றெட்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தெட்டு மட்டும்) & 28–07–2022	₹17,63,000/– (ரூபாய் பதினேழு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் மட்டும்)	₹1,76,300/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தாறு ஆயிரத்து முந்நூறு மட்டும்)	அடையாளப் பூர்வம்

அசையாச் சொத்து விவரம்: ஒரூர் வட்டத்தின் மேலும் ஒரூர் சார் பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட மேலும் ஒரூர் நகராட்சியின் நகராட்சி வரம்புடன் இணைக்கப்பட்ட, ஒரூர் நகர் "அண்ணா நகரில்" நத்தம் சர்வே எண் 16, பரப்பளவு 57 சதுர மீட்டர் அல்லது 728 சதுரடி மேற்கூறிய முறையில் விற்பனையாளருக்கு சொந்தமான சொத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி இதன் **எல்லைகள்; கிழக்கில்:** திரு. D முனியப்பா அவர்களுக்கு சொந்தமான வீடு, **மேற்கில்:** சின்னப்பா அவர்களுக்கு சொந்தமான நிலம், **வடக்கில்:** திரு. போடியப்பா அவர்களுக்கு சொந்தமான வீடு, **தெற்கில்:** சாலை. **மேற்கூறிய எல்லைகளுக்குள், விஸ்தீரணம்:–** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 26.0 அடி: கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 26.0 அடி; வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 28.0 அடி; வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 28.0 அடி; அமைக்கும் மொத்தப் பரப்பு 57 சதுர மீட்டர் அல்லது 728 சதுரடி காலி மனை இந்த விற்பனை பத்திரத்தில் அடங்கிய பொது சாலைகளில் மட்டும் பொது உரிமை உட்பட.
(குறிப்போது மேற்கூறிய சொத்து ஒரூர் நகராட்சியின் நகராட்சி வரம்புக்கள் 57 சதுர மீட்டர் பரப்பளவு பிளாக் எண் 60 இன் வார்டு எண் B இல், புதிய நகர் சர்வே எண்: 199 அங்கமாகும் புதிய நகர் சர்வே திட்டத்தின்படி மறு–சர்வேயிடப்பட்டுள்ளது)

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, தவறினால் அசையாச் சொத்து அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.
இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையை கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது. விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்:
குறிப்பு: மின்–ஏலம் ஆனது https://bankeauctions.in இணைய முகப்பு மூலம் 29–03–2023 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:
1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழேக் கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும்.
2. அசையாச் சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது.
3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: ₹10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)
4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் "டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிட்." பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும்.
5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியடைந்தவர் மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும்.
6. பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவினனது ஆகும்.
7. முன் அனுமதியில் 20–03–2023 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம்.
8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும்.
9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்கு பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும்.
10. மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடா செய்ய தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும் மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோருரிமைகளையும் இழப்பார்.
11. சொத்துக்கு உட்பட்ட, டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெடுக்கு தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. சொத்துக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் கோருரிமைகள் ஏதேனுமிருந்தால் மேலும் அதன் தன்மை மற்றும் மதிப்பு குறித்த பிற தெரிந்த விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. திட்டமிடும் ஏலதாரர் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி செயல்பாட்டுக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள் சேவை வழங்குனர், M/s. 4குளோசர், பிளாக் எண் 605 A, 6வது தளம், மைத்ரிவனம் வணிக வளாகம், அமீர்ப்பேட்டை, ஹைதராபாத்–500038 அவர்களை அதன் ஒருங்கிணைப்பாளர்கள் திரு. U.சுப்பாராவ், கைபேசி எண் 8142000061, subbarao@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண் 8588983696 மூலம் தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் – 9999078669–க்கு அனுப்பவும்.
13. உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும் மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும் மேலும் சலான் நகல்பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
14. மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும் https://bit.ly/3JmGsmo
15. மேலும் https://www.tatacapital.com/property–disposal.html இணைப்பையும் காண்க.
கவனத்தில் கொள்க–டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழே கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 13.03.2023

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிட்.

சுங்கக்கட்டணத்தை உயர்த்தும் முடிவை திரும்ப பெற வேண்டும்

ஒன்றிய அரசுக்கு ஓபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, மார்ச் 13: சுங்கக்கட்டணத்தை உயர்த்தும் முடிவை திரும்ப பெறவேண்டும் என ஒன்றிய அரசுக்கு ஓ.பன்னீர் செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்தியாவிலேயே சுங்கச்சாவடிகள் அதிகம் இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு.

சுங்கக் கட்டண உயர்வு என்பது மக்கள் மீது கூடுதல் நிதிச் சுமையை ஏற்படுத்தும் செயலாகும். இதன்மூலம் வாகன வாடகைக் கட்டணம் உயர்த்தப்பட்டு, அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலையும் கணிசமாக உயரும் நிலை ஏற்படும். சுங்கக் கட்டண உயர்வு என்பது ஒரு சங்கிலி இணைப்பைப் போன்றது. இதனைத் திரும்பப் பெற வேண்டுமென்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

பொதுமக்களின் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்யும் வகையில், சுங்கக் கட்டண உயர்வினை உடனடியாக ரத்து செய்து விலைவாசி உயர்விலிருந்து மக்களைக் காப்பாற்றவும், தமிழ்நாட்டிலுள்ள சுங்கச்சாவடிகளை குறைக்கவும் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், ஒன்றிய அரசுக்கு தேவையான அழுத்தத்தை தமிழ்நாடு அரசு அளிக்க வேண்டும்.

16 தமிழ்நாடு மீனவர்கள் கைது

இலங்கை அட்டூழியத்துக்கு முடிவு கட்ட வேண்டும்

ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, மார்ச் 13: ராமதாஸ் வெளியிட்ட டிவிட்டர்:

வங்கக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ்நாடு மீனவர்கள் 16 பேரை அவர்களின் இரு விசைப்படகுகளுடன் சிங்களக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். தமிழ்நாட்டு மீனவர்கள் அவர்கள் பாரம்பரியமாக மீன் பிடித்து வரும் பகுதிகளில் மீன்பிடித்தால் கூட அவர்களை சிங்களக் கடற்படையினர் கைது செய்கின்றனர்.

இது தமிழ்நாட்டு மீனவர்களுக்கு மரபுவழியாக வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை பறிக்கும் செயலாகும். இதை அனுமதிக்கக் கூடாது. தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதாலும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதால் மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். ஒரு படகு பறிமுதல் செய்யப்பட்டால் குறைந்தது 20 குடும்பங்கள், அதாவது 100 பேரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மீனவர்கள் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 16 மீனவர்களையும், படகுகளையும் மீட்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இன்று +2 பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்கள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்

SCHOOL OF ALLIED HEALTH SCIENCES

Vinayaka Mission's Research Foundation - Deemed To Be University
(Declared Under Section 3 of the UGC Act, 1956) (Accredited by NAAC 'A' Grade)
NH-47, Sankari Main Road, Veerapandi Post, Salem-636308.

VIMS HOSPITAL CAMPUS

DSIR NPTEL LOCAL CHAPTER MHRD'S INNOVATION CELL ISO INSTITUTION'S INNOVATION COUNCIL swayam

எதற்கு SAHS (VIMS CAMPUS) கல்லூரியை தேர்ந்தெடுக்க வேண்டும்?

மருத்துவதுறைச் சார்ந்த படிப்புகளுக்கு நீட் தேர்வு அவசியம் இல்லை.

- Allied Health Science கல்வி துறையில் 20 வருடங்களுக்கும் மேலாக அனுபவம்
- இந்தியாவில் 100-க்கும் மேற்பட்ட முன்னணி மருத்துவமனைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கும் கல்லூரி
- மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கத்தோடு அவர்களை சிறந்த தொழில்முனைவோர் ஆக்குவதற்கு மத்திய அரசின் IIC மற்றும் தமிழ்நாடு அரசின் E-CELL அங்கீகாரம் பெற்ற முதல் Allied Health Science College
- மாணவர்களின் வேலைவாய்ப்பை பிரகாசமாக்க டிகிரி சான்றிதழுடன் கூடுதலாக சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. 1.Value Added Course 2.Online free courses through Coursera Campus, Edx and SWAYAM 3.Industry Specific and Industry designed Certificate courses 4.Skill development program
- மாணவர்கள் மருத்துவமனையில் சிறப்பாக பணிபுரிய முதலாம் ஆண்டிலிருந்தே 14 Simulation லேப் பயிற்சி வழங்கும் ஒரே Allied Health Science College
- பள்ளிக் குழந்தைகளுக்கு வழிகாட்டும் Atal Tinkering Lab அங்கீகரிக்கப்பட்ட ஒரே கல்லூரி
- மாணவர்களை சமூக நலன் அக்கறை உள்ளவர்களாக மாற்றுவதற்கு NSS, Rotaract, Young Indians(CII), Youth Club-NYKS, MYAS-GoI, Fit India Club, Gender Sensitisation Cell போன்ற அமைப்புகள் உள்ள கல்லூரி
- கல்வி மற்றும் விளையாட்டில் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

COURSES OFFERED @